<u>DEPOSITION OF WITNESS</u>

<u>Judicial Form No. 53</u>

<u>(See Rule 42)</u>

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No.4 /2021 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for Prosecution | : | L.W. P.W.5 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பழனிசாமி | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | | ஜாதி | : | |
| கிராமம் | : | | இனம் | : | |
| தாலூக்கா | : | | வயது | : | |
| Mail ID | : | | Mobile No. | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 09.03.2026.

<u>**முதல் விசாரணை**</u>

<u>**முதல் விசாரணை**</u>

நான் குமரலிங்கம் காவல் நிலையத்தில் பணிபுரிந்து சிறப்பு உதவி ஆய்வாளராக கடந்த *30.04.2024* ம் தேதியன்று ஓய்வு பெற்று விட்டேன். இதற்கு முன் அமராவதி காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியில் இருந்த போது கடந்த *07.12.2019* ம் தேதியன்று அதிகாலை *1.00* மணியளவல் நான் பொறுப்பு அலுவில் இருந்த போது நேரில் ஆஜரான ஆர் பாபு த/பெ. ராமகிருஷ்ணன் கம்பம்பட்டி ஊட்டி மாவட்டம் என்பவர் கொடுத்த எழுத்து மூலமான புகாரினை பெற்று நிலையம் பரிசிலனைக்கு பின் நிலைய குற்ற எண் *195/2019* ச/பி *279, 304(A)* இதச வின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து அசல் ஆவணங்களை கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பி அதன் ஒரு நகலை பொறுப்பு காவல் ஆய்வாளர் திருமதி மகேஷ்வரி என்பவரின் பார்வைக்கு வைத்தேன். **முதல் தகவல் அறிக்கை அசா.ஆ.*3* என குறியீடு செய்யப்படுகிறது**. இது சம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

*1.* புகாரின் படி அசா.*1* ஆனவர் ஊட்டியில் வசித்து வருகிறார் என்றால் சரிதான். அசா.*1* ன் புகாரில் உள்ள கையெழுத்தும் முதல் தகவல் அறிக்கையில் உள்ள கையெழுத்தும் வேறுபாடாக உள்ளது என்றால் இல்லை அவர் தான் போட்டார். முதல் தகவல் அறிக்கையில் காலம் *12* ல் குற்ற நிகழ்வு நாள் என்ன என்றுள்ளது என்றால் *06.12.2019* என்றுள்ளது. *2016* என்று தான் உள்ளது என்றால் தவறுதலாக டைப் செய்யப்பட்டுள்ளது. புகார் கொடுக்க *6 1/4* மணி நேரம் என்றால் சரிதான். காலதாமதம் குறித்து சொல்லவில்லை என்றால் சரிதான். காவல் நிலையத்திற்கு சரியாக தகவல் கிடைத்த நேரம் என்ன என்றால் *5.15* விபத்து நடந்தது, அவர் வந்து புகார் கொடுத்தது அதிகாலை *1.00* மணி. அதிகாலை *1.00* மணி என்றால் சரிதான். அப்படி யென்றால் புகார் அதற்கு முன்னிட்டு எழுதப்பட்டிருக்கும் என்றால் அவர் எழுதி கொடுத்துள்ளார். புகார் பின்னிட்டு தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. அதனால் தான் நீதிமன்றத்திற்கு *10* நாட்கள் காலதாமதமாக முதல தகவல் அறிக்கை அனுப்பட்டது என்றால் இல்லை. அசா.*1* கண்ணுற்ற சாட்சி இல்லை என்றால் சரிதான். நஷ்ட ஈடு பெற வேண்டி கொடுத்த பொய்யான புகாரினை பெற்று சரிவர விசாரிக்காமல் முதல் தகவல் அறிக்கை பதியப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T.Nithyakala , B.Com.,B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.